ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1997/15 - 2016 දෙසැම්බර් මස 14 වැනි බදාදා - 2016.12.14

*1997/15 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு காலி நகர எல்லை கழிவுநீர் மீள் சுழற்சி கருத்திட்டத்தின் இடைநிலை நீர் இறைக்கும் இயந்திரசாலை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் வரும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2016, திசெம்பர் 01,*
*5/2/2/1236.*

**அட்டவணை**

*காலி மாவட்டத்தில், காலி கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் : 99 B பெட்டிகலவத்த கிராம அலுவலர் பிரிவில், பெட்டிகலவத்த கிராமத்தில் அமைந்துள்ள, ஏதன்டிமுலனவத்த என்றழைக்கப்படும் காணியில் இருந்து 10 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | நீரோடை ; |
| கிழக்கு | : | வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் நிறுவனம் உரிமைகோரும் காணி ; |
| தெற்கு | : | கிரவல் வீதி ; |
| மேற்கு | : | இந்தக் காணியின் எஞ்சிய பகுதி. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:*
*1. வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் நிறுவனம் - காலி,*
*2. நகர சபை - காலி.*

*12- 1131*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*